(இ) மதுரை மாவட்டம், உசிலம்பட்டி உட்கோட்டத்தில் கட்டாய நெல் கொள்முதல்.

மதிப்பிற்குரிய பேரவைத்தலைவர் : அடுத்து, மதிப்பிற்குரிய உறுப்பினர் திரு. கரு. சீமைச்சாமி அவர்கள் ஒரு ஒத்திவைப்புத் தீர்மானம் கொண்டுவர அனுமதி கோரி கடிதம் எழுதியுள்ளார். அந்தத் தீர்மானத்தின் வாசகம் பின்வருமாறு :—

"மதுரை மாவட்டம், உசிலம்பட்டி உட்கோட்டத்தில் கட்டாய நெல் கொள்முதல் செய்யும் பொதுவருவாய்த் துறை அதிகாரிகள் மக்களை மிரட்டி, மற்றும் பல துன்பங்களை இழைத்து சிறு விவசாயி களிடம் அவர்கள் சொந்த உபயோகத்திற்கு வைத்திருக்கும் தானியங்களை பூராவும் எடுத்துச் செல்கிறார்கள். அதனால் மக்கள் பீதியுற்று, அதிகாரிகளின் அடக்குமுறைக்கும், பயமுறுத்தலுக்கும் பயந்து, தங்கள் ஊர்களை விட்டு ஓடும் நிலையில் உள்ளனர். ஆகவே மக்கள் அமைதியாக வாழும் நிலை அங்கு சீர்குலைந்துள்ளது" என்று ஒத்திவைப்புத் தீர்மானத்திற்கு அனுமதி கோரியுள்ளார்.

இந்தத் தீர்மானத்தில் கண்டுள்ள பிரச்சினை அரசினரின் அன்றாட நிர்வாகத்திற்கு உட்பட்டது என்பதல்லாமல் இந்தப் பிரச்சினையைப் பற்றிப் பேசுவதற்கு வாய்ப்பு வேறு இருக்கும் போது அனுமதி கொடுக்க முடியாது. இதுபற்றிப் பேசுவதற்கு, இன்னும் கவர்னர் உரையின் மீதுள்ள விவாதம் மூன்று நாட்கள் இருக்கின்றன. மேலும், இன்டரீம் பட்ஜட், இடைக்கால வரவு-செலவுத் திட்டத்தின் மீதுள்ள விவாதமும் இருக்கிறது. இந்தக் காரணங்களினால் இந்தத் தீர்மானத்தைக் கொண்டு வருவதற்கு நான் அனுமதி கொடுக்கவில்லை என்பதைத் தெரிவித்துக் கொள் கிறேன்.

(உ) கோவைப் பஞ்சாலைகளில் கதவடைப்பும், தொழிலாளரின் வேலையின்மையும்.

மதிப்பிற்குரிய பேரவைத்தலைவர் : அடுத்து, மற்றொரு ஒத்தி வைப்புத் தீர்மானத்தை மதிப்பிற்குரிய உறுப்பினர் திரு. எம். பூபதி அவர்கள் கொண்டுவருவதற்கு பேரவைத்தலைவரின் அனுமதியைக் கோரியுள்ளார்கள். அதன் வாசகம் பின் வருமாறு :

"கோவையில் பல மாதங்களாக மூடிக்கிடக்கும் (1) கம் போடியா, (2) ஜனார்த்தன, (3) காளீஸ்வரா, (4) சோமசுந்திரா, (5) வாசுதேவா, (6) ஸ்ரீரங்கவிலாஸ் ஆகிய பஞ்சாலைகளைக் கதவடைப்புச் செய்துள்ளதால் 7,000 தொழிலாளர்கள் வேலை யில்லாமல் பாதிக்கப்பட்டு ஆயிரக்கணக்கான குடும்பங்கள் பட்டினி கிடந்துவரும் விஷயத்தைப்பற்றி விவாதிக்கவும், 6,000-க்கு மேல் வேலை செய்யும் டெக்ஸ்டூல் தொழிற்சாலையில் மூன்று மாத காலமாக சம்பளம் கொடுக்காததால், தொழிலாளர் வேலை நிறுத்தம் நடந்து வருவதைப்பற்றி விவாதிக்கவும்" என்ற தீர்மானத்திற்கு அனுமதி கோரியுள்ளார்.

இன்டஸ்ட்ரியல் டிஸ்ப்யூட்ஸ் ஆக்ட் என்று சொல்லக் கூடிய தொழில் விவகாரச் சட்டத்தால் தீர்க்கப்படக் கூடிய

காரியங்களுக்கு ஒத்திவைப்புத் தீர்மானம் கொண்டு வரக் கூடாது என்பது 'மேஸ் பார்லிமெண்டரி ப்ராக்டீஸ்' என்ற புத்தகத்தில் 368-வது பக்கத்தில் கூறியிருக்கிறது. இதை உறுப்பினர்கள் கவனத்தில் வைத்துக்கொள்ளுமாறு கேட்டுக்கொள்கிறேன். அதோடு இதுபற்றிய விவாதத்திற்கு இன்னும் கவர்னர் உரை மீது மூன்று நாட்கள் விவாதம் நடக்க இருக்கிற காரணத்தினால் மதிப்பிற்குரிய உறுப்பினர் அதன் மீது பேசுவதற்கு அவகாசம் இருக்கும் என்று கருதி இந்தத் தீர்மானத்தைக் கொண்டு வர நான் அனுமதி கொடுக்கவில்லை என்பதை இந்த அவைக்குத் தெரிவித்துக் கொள்கிறேன்.

2. அவசர முக்கியப் பிரச்சினை குறித்து கவன ஈர்ப்பு—விலைவாசி ஏற்றம், கள்ளக் கடத்தல், பதுக்கல் ஆகியவற்றைத் தடுத்தல்.

மதிப்பிற்குரிய பேரவைத் தலைவர் : இந்தப் பேரவையின் 41-வது விதிக்கிணங்க அவசரமும், முக்கியமான பிரச்னை ஒன்றை மதிப்பிற்குரிய உறுப்பினர் மா. இராசாங்கம் அவர்கள் மதிப்பிற்குரிய உணவு அமைச்சர் அவர்களின் கவனத்திற்குக் கொண்டு வருவார்கள்.

திரு. மா. இராசாங்கம் : மதிப்பிற்குரிய மன்றத் தலைவர் அவர்களே, உணவு நெருக்கடியை தீர்ப்பது, விலைவாசியைக் கட்டுப்படுத்துவது, உணவு, உரப் பொருள்களின் கள்ளக் கடத்தல், பதுக்கல் ஆகியவற்றைத் தடுப்பது குறித்து, அரசாங்கம் தமிழகம் முழுவதும் மேற்கொண்ட நடவடிக்கைகள் பற்றிய அவசர பொது முக்கியத்துவம் வாய்ந்த விஷயத்தை மதிப்பிற்குரிய உணவு அமைச்சர் அவர்களின் கவனத்திற்குக் கொண்டு வருகிறேன்.

* **மதிப்பிற்குரிய திரு. கே. ஏ. மதியழகன்** : மதிப்பிற்குரிய பேரவைத் தலைவர் அவர்களே, முந்திய அரசாங்கத்தின் உணவுக் கொள்கையைக் குறித்து இவ்வரசாங்கம் விழிப்புடன் மறு ஆய்வு செய்துள்ளது. 1964 முதல் உணவு தானியக் கொள்முதல், வழங்கல் முறை குறித்துப் பின்பற்றிய கொள்கையில் உற்பத்தியாளர்கள் மீது கருத்தளவிலேயே கொள்முதல் விதிக்கப்பட்டது. அவ்வாறு கொள்முதல் செய்யப்பட்ட முடை இருப்புகளை Buffer stocks கொண்டு குறிப்பிட்ட சில பற்றுக்குறைப் பகுதிகளுக்கு உணவு வழங்கும் பொறுப்பு மேற்கொள்ளப்பட்டது. சட்டபூர்வமான பங்கீட்டுப் பகுதிகளிலும், உரிய முறையில் இல்லாத பங்கீட்டுப் பகுதிகளிலும் எளிதில் அல்லலுக்குட்படும் நிலையில் உள்ள பொது மக்கள் அனைவருடைய தேவைகளையும் நிறைவேற்றும்பொருட்டு நாளடைவில் மிக மும்முரமாகக் கொள்முதல் செய்யும் வகையில் இக்கொள்கை படிப்படியாக உருவாக்கப்பட்டது. இதனால் அரசாங்கக் கட்டுப்பாட்டுக் கடைகளின் வாயிலாக உணவு தானியங்களை வழங்க ஆண்டுதோறும் சுமார் 6½ லட்சம் முதல் 7 லட்சம் டன் அரிசி வரை தேவைப்படுகிறது. ஒரே மண்டல அமைப்பிற்குப் பின்னர், இத்தேவைகளை நிறைவேற்றுவதோடு, இந்திய அரசாங்கத்தோடு ஒப்புக்கொண்டதற்கிணங்க, அரிசி விளைச்சல் குறைந்த கேரளா, மைசூர் மாநிலங்களுக்கு ஒரு லட்சம் டன்